**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.462/2024**

2026ம் ஆண்டு மே மாதம் 12–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.சண்முகம் | **PW–1** | தொழில் | – |
| த/க பெயர் – | | | வயது | – |
| அலைபேசி – | | | முகவரி | – |

**(எதிரி ஆஜர் இல்லை, ஆஜரின்மைக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

1) நான் திருப்பத்தூர் மாவட்டத்தில் குடியிருக்கிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னுடைய தங்கை இறந்துவிட்டார். என் தங்கை ராஜாமணியை போச்சம்பள்ளிக்கு திருமணம் செய்து கொடுத்திருந்தோம், அவர் தன் கணவருடன் வாழ பிடிக்கவில்லை என்று என்னுடைய வீட்டிற்கு வந்து விட்டார். அவர் சமையல் வேலை செய்து கொண்டிருந்தார்.

2) கடந்த 2018 ஆம் ஆண்டு ஒன்பதாவது மாதத்தில் திருப்பூர் மாவட்டத்தில் இருந்து ஈரோடு மாவட்டத்திற்கு அவர் சமையல் வேலை செய்வதற்காக வந்தார், அப்போது விபத்து ஏற்பட்டது. அது ஒரு இருசக்கர வாகன விபத்து அதனை ராணி என்பவர் தான் எங்களுக்கு தகவல்

Dr.V.Sree Vidya Date: 2026.05.12 18:11:27 +0530

சொன்னார். மேற்சொன்ன விபத்தை நான் நேரில் பார்த்தேன். ராணி சொன்னதற்கு பிறகு நான் நேரில் சென்று விபத்து இடத்தை பார்த்தேன். விபத்து நடந்த பின்பு என் தங்கை ராஜாமணியின் உடலை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். அதன் பின்பு ரங்கம் பாளையம் காவல் நிலைய போலீசார் விசாரணை செய்து என் தங்கையின் உடலை என் வசம் ஒப்படைத்தார்கள்.

3) இது சம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த பின்பு போலீசார் என்னை விசாரித்தார்கள். காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் **அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது. நான் தான் புகார் கொடுத்தேன் என்ற போதிலும் அந்த புகாரில் உள்ள கையெழுத்து மட்டும்தான் என்னுடையது. அங்கு காவல் நிலையத்தில் ஏற்கனவே எழுதி வைத்திருந்தார்கள் அதில் கையெழுத்து செய்தேன்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Dr.V.Sree Vidya
Date: 2026.05.12 18:11:42 +0530